## தொப்பம்பட்டியில் ரூ.2.17 கோடி மதிப்பிலான
# புதிய திட்டப்பணிகளை அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்



**ஒட்டன்சத்திரம், பிப். 13-**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூத்தம்பூண்டி, கரியாம்பட்டி, அப்பிபாளையம், அப்பனூத்து, வேலம்பட்டி உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிப் பகுதிகளில் ரூ.2.17 கோடி மதிப்பீட்டிலான திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்து மற்றும் ரூ.2.26 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்.

இந்த அடிக்கல் நிகழ்ச்சிகளில், பழனி வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர்கள் சஞ்சய்காந்தி, வட்டாட்சியர் பிரசன்னா, திண்டுக்கல் மாவட்ட துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) கார்த்திகேயன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தாஹிரா, குமரன், ஒன்றிய செயலாளர் தங்கம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜேஷ், பெரியநாயகி மகேஷ், கணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தண்டபாணி உள்ளிட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திருமங்கலம் அருகே
# மத்திய அரசை கண்டித்து தி.மு.க. கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்
### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பங்கேற்பு



**திருமங்கலம், பிப். 13-**

மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப் படாததை கண்டித்து தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மதுரை தெற்கு மாவட்டத்திலுள்ள திருமங்கலம், திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி தொகுதிகளின் பல்வேறு கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக மதுரை தெற்கு மாவட்டம், திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் கப்பலூர் சிட்கோவில் செயல்பட்டு வரும் பாரத ஸ்டேட் வங்கி முன்பாக தமிழகத்திற்கு நிதி ஒதுக்கிட மறுத்திடும் மத்திய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திருமங்கலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் தங்கப் பாண்டியன் தலைமையிலும் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப் பாண்டியன் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது. மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது: தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசு வஞ்சிக்கிறது. தமிழகத்தை பழிவாங்கும் போக்கில் பா.ஜ.க. செயல்படுகிறது. அதற்கு அதி.மு.க. துணை போகிறது. கல்விக்கு ஒதுக்கப்பட்ட 3 ஆயிரம் கோடியை மத்திய அரசு திருப்பி எடுத்துக் கொண்டதால் தமிழகத்தில் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. அதே போல் மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களையும் மத்திய அரசு நிறுத்திவிட்டது. இன்னும் 500 ஆண்டுகள் ஆனாலும் பா.ஜ.க. தமிழகத்தில் வரமுடியாது. தி.மு.க. அதை தடுத்து நிறுத்திடும். மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒரே இயக்கம் தி.மு.க.. விரைவில் வரவுள்ள பட்ஜெட் மற்றும் தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்று வரும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி பெறுவது நிச்சயம் என்று பேசினார்.

இதனை தொடர்ந்து மத்திய அரசை கண்டித்தும், பா.ஜ.க.வுக்கு துணை போகும் அதி.மு.க.வை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திருமங்கலம் தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன், ஒன்றிய அவை தலைவர் தனுஷ் கோடி, மாவட்ட ஐ.டி விங் அமைப்பாளர் ஜெயச்சந்திரன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சோனியா விஜய், மொச்சிகுளம் எம்.ஆர்யா, ரஞ்சித் குமார், மாரியப்பன் மற்றும் மதசார்பற்ற கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க., அ.தி.மு.க.வை கண்டித்து மேலூரில் தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம்




**மேலூர், பிப். 13-**

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மேலூர் தபால் நிலையம் அருகே நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மேலூர் நகர் செயலாளரும், மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின் தலைமை தாங்கினார். மேலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் இளங்கண்ணன், மேலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திர பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் கொன்னடியான், இளஞ்செழியன், துரை மகேந்திரன், வழக்கறிஞர் மாலைமுத்தன், பி.எஸ். ராஜாமணி, மணவாளன், மகாதேவன், நகர் மன்ற உறுப்பினர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அதேபோல் மேலூர் தி.மு.க. மேற்கு, வடக்கு, அ.வல்லாளபட்டி பேரூராட்சி சார்பில் இந்தியன் பேங்க் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மேலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் வ.ரெகுபதி, வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.செல்வராஜ், அ.வல்லாளபட்டி பேரூர் செயலாளர் குமரன் மற்றும் கார்த்திகேயன், சந்திரன், மலைச்சாமி, மோகன், அசோகன், துரைப்பாண்டி, கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திட்ட மேலாண்மை நிபுணர்கள் பங்கேற்கும்
## இன்டர்நேஷனல் ப்ராஜெக்ட் மேனேஜ்மென்ட் அசோசியேஷன் சர்வதேச மாநாடு: பிப்ரவரி 13, 14-ல் மகாபலிபுரத்தில் நடைபெறுகிறது

**சென்னை, பிப் 13-**

ஐபிஎம்ஏ குளோபல் ப்ராஜெக்ட் புரொபஷன் போரம் என்னும் சர்வதேச மாநாட்டை சிறந்த திட்ட மேலாண்மைக்கான உலகின் முன்னணி அமைப்பான இன்டர்நேஷனல் ப்ராஜெக்ட் மேனேஜ்மென்ட் அசோசியேஷன் நடத்த உள்ளது. இந்த மாநாட்டிற்கு, இந்தியாவின் திட்ட மேலாண்மை நிபுணர்களுக்கான அமைப்பான 'ப்ராஜெக்ட் மேனேஜ்மென்ட் அசோசியேட்ஸ், இந்தியா' ஏற்பாடு செய்துள்ளது. இந்த மாநாட்டில் சிந்தனைத் தலைமை மற்றும் முக்கிய உத்திகள் சார்ந்த கலந்துரையாடல்கள் இடம் பெற உள்ளது. பிப்ரவரி 13-ந்தேதி அன்று காலை குத்து விளக்கேற்றி இந்த மாநாடு துவங்குகிறது. அதனைத் தொடர்ந்து ப்ராஜெக்ட் மேனேஜ்மென்ட் அசோசியேட்ஸ், இந்தியாவின் தலைவரும், பிரம்மோஸ் நிறுவனர் தலைமை செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குனருமான டாக்டர் ஏ. சிவதாணுபிள்ளை வரவேற்புரை ஆற்றுகிறார். ஐபிஎம்ஏ நிதி மற்றும் செயல்பாட்டு துணைத் தலைவர் விளாடிமிர் ஒப்ராடோவிக் இந்த மாநாட்டின் கருப்பொருள் குறித்து விளக்க உரையாற்றுகிறார். மாநாட்டை ஐபிஎம்ஏ தலைவர் மிலாடன் வுகோமனோவிக் துவக்கி வைக்கிறார். இந்த மாநாட்டில் பிஎம்ஏ புரவலர் அனில் ரஸ்தான், இந்து குழும இயக்குனர் என். ராம், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

இதில் செயற்கை நுண்ணறிவு உதவியுடன் கூடிய திட்டத் தலைமை மற்றும் நிர்வாகம், சிக்கலான திட்ட சூழல்களில் புதுமை மற்றும் செயல் வேகம், திட்டங்களில் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்புகளை இணைத்தல், உலகளாவிய திட்டத் தொழில்முறைக்கு எதிர்காலத்தில் தேவைப்படும் திறன்கள் ஆகிய தலைப்புகளில் குழு விவாதம் மற்றும் கலந்துரையாடல் அமர்வுகள் இடம்பெற உள்ளன. இந்தியாவில் நடைபெறும் இந்த ஐபிஎம்ஏ உலகளாவிய மாநாட்டில் பல்வேறு துறைகள் மற்றும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கின்றனர். அதேபோல, இந்தியாவில் உள்ள திட்ட மேலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மை அமைப்பாகவும், நாடு முழுவதும் திறமையான திட்ட மேலாண்மையை வலியுறுத்தும் அமைப்பாகவும் 'பிஎம்ஏ இந்தியா' தனது சிறப்பான பங்களிப்பை வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாநாடு மகாபலிபுரத்தில் நாளை மற்றும் நாளை மறுநாள் என இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது.

## மீடியா எக்ஸ்போ விரிவுபடுத்த மெஸ்ஸி பிராங்பேர்ட் வர்த்தக கண்காட்சிகள் இந்தியா, பிசினஸ் லைவ் டிரேடு பேர்ஸ் நிறுவனத்துடன் கைகோர்க்கிறது

**மதுரை, பிப் 12-**

மெஸ்ஸி பிராங்பேர்ட் வர்த்தக கண்காட்சிகள் இந்தியா, மற்றும் பிசினஸ் லைவ் டிரேடு பேர்ஸ் இணைந்துள்ள இந்த முக்கிய கூட்டாண்மையின் கீழ், இந்தியா எக்ஸ்போவில் கையெழுத்திடுங்கள் இப்போது மீடியா எக்ஸ்போ ஆக மாற்றப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக மீடியா எக்ஸ்போ கொச்சி மற்றும் மீடியா எக்ஸ்போ ஹைதராபாத் அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலும் இந்தியா எக்ஸ்போ சென்னை, கையெழுத்திடுங்கள். ஏற்கனவே நடைபெற்று வரும் மீடியா எக்ஸ்போ சென்னை நிகழ்ச்சியுடன் இணைக்கப்படுகிறது. இதன் மூலம் முன்பு மூன்று நகரங்களில் நடைபெற்ற மீடியா எக்ஸ்போ , இனி சென்னை, ஹைதராபாத், கொச்சி, மும்பை மற்றும் நியூ டெல்லி ஆகிய ஐந்து முக்கிய நகரங்களுக்கு விரிவடைகிறது. மும்பை, நியூ டெல்லி மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் 56 வெற்றிகரமான பதிப்புகளை நடத்திய மீடியா எக்ஸ்போ , தென் இந்திய சந்தைகளில் வலுவான தடத்தை பதித்துள்ள சிங் இந்தியா எக்ஸ்போ-வின் மரபையும் இணைத்து, பிரிண்டிங், சைனேஜ், டிஜிட்டல் சைனேஜ், ஓஓஎச்- டிஓஓஎச், ரீட்டெயில் டிஸ்ப்ளே, பாப்- பிஓஎஸ்எம், எல்இடி திரைகள், பெரிய அளவிலான பிரிண்டிங், 3டி மற்றும் லேசர் பிரிண்டிங் உள்ளிட்ட பல தயாரிப்பு பிரிவுகளுக்கான ஒருங்கிணைந்த தொழில் வர்த்தக கண்காட்சி தளமாக மாறுகிறது. இந்த கூட்டாண்மையை பற்றி மெஸ்ஸி பிராங்பேர்ட் ஆசியா ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ராஜ் மணேக் மற்றும் வணிக நேரடி வர்த்தக கண்காட்சிகள் இயக்குநர் சிவ பிரசாத் பல்நாட்டி ஆகியோர், தென் இந்தியாவில் தொழில்துறைக்கு ஒருங்கிணைந்த, உலகளாவிய நிபுணத்துவம் கொண்ட கண்காட்சி மேடை உருவாகும் என வலியுறுத்தினர். ஐஎம்ஏஆர்சி குழுமம் மற்றும் மோர்டோர் நுண்ணறிவுமதிப்பீடுகளின்படி, இந்தியாவின் பிரிண்டிங், சைனேஜ் மற்றும் ஓஓஎச்- டிஓஓஎச், சந்தைகள் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், இந்த முயற்சி தொழில்துறையின் எதிர்கால தேவைகளுக்கு தகுந்த வலுவான அமைப்பை உருவாக்குகிறது.

# சக்திவாய்ந்த பேட்டரி, ஏஐ கேமரா, பிரீமியம் டிசைன் ஒப்போ ரெனோ 15சி அறிமுகம்

**கோவை, பிப் 13-**

ஒப்போ இந்தியா தனது ரெனோ 15 சீரிஸ் Series வரிசையை விரிவுபடுத்தும் வகையில் புதிய ரெனோ 15சி ஸ்மார்ட் போனை அறிமுகப்படுத்தியுள்ளது. பயணம், புகைப்படம், வீடியோ உருவாக்கம் போன்றவற்றில் ஆர்வம் கொண்ட பயனர்களுக்கு முழுமையான ரெனோ அனுபவம் வழங்கும் நோக்கில் இந்த மாடல் வடிவமைக்கப்பட்டுள்ளது. 7000 எம்ஏஎச்பேட்டரி, 80 டபிள்யூ சூப்பர்வூக்™ ஃபாஸ்ட் சார்ஜிங், 6.57 அமோல்டு டிஸ்ப்ளே, ஸ்னாப்டிராகன்® 6 ஜெனரல் 1 பிராசஸர், மற்றும் கலர் ஓஎஸ் 16 ஆகிய அம்சங்களுடன், மெலிதான மற்றும் பிரீமியம் டிசைன் இந்த போன் வருகிறது. ஆஃப்டர் க்ளோ பிங்க் மற்றும் ட்விலைட் ப்ளூ நிறங்களில் பிப்ரவரி 5 முதல் இது விற்பனைக்கு கிடைக்கும். புகைப்படம் மற்றும் வீடியோ உருவாக்கத்தை மையமாகக் கொண்டு ரெனோ 15சி மாடலில் 50MP மெயின் கேமரா, 8எம்பிஅல்ட்ரா-வைட், 2எம்பி மேக்ரோ மற்றும் 50எம்பி அல்ட்ரா-வைட் செல்ஃபி கேமரா வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து ஒப்போ இந்தியா சார்பில் டாமன் யாங், தலைவர், ஒப்போ இந்தியா கூறுகையில், ரெனோ சீரிஸ் எப்போதும் டிசைன், கேமரா மற்றும் பயனர் அனுபவத்தை புதிய அளவுகோல்களை அமைத்துள்ளது. ரெனோ15சி மூலம் அந்த அனுபவத்தை மேலும் பலருக்கும் கொண்டு செல்கிறோம். நீண்ட நேர பேட்டரி, சக்திவாய்ந்த ஏஐ கருவிகள் மற்றும் கிரியேட்டர்களுக்கேற்ப கேமரா திறன்கள் ஆகியவை, இன்றைய தலைமுறையின் வேகமான வாழ்க்கை முறைக்கு சிறந்த துணையாக இருக்கும் என்றார். ரெனோ15சி 8ஜிபி+256ஜிபி மாடல் ரூ.34,999 மற்றும் 12ஜிபி+256ஜிபி மாடல் ரூ.37,999 விலையில் அமேசான், ப்ளிப்கார்ட், ஒப்போ இ-ஸ்டோர் மற்றும் ரீட்டெயில் கடைகள் சலுகைகளுடன் கிடைக்கிறது.

# நிப்பான் பெயின்ட் இந்தியா: ஜெனெண்டர் ஆனந்த் துணைத் தலைவராக நியமனம்

**சென்னை, பிப் 13-**

என்ஐபிஎஸ்இஏ குழுமத்தின் பகுதியான நிப்பான் பெயிண்ட் இந்தியா, தனது ஆட்டோமோட்டிவ் ரீ ஃபினிஷ் வணிகத்தின் துணைத் தலைவராக ஜெனெண்டர் ஆனந்த்யை நியமித்துள்ளது. இந்தியா, நிப்பான் பெயிண்ட் நேபாளம் மற்றும் இண்டோ கோட் வணிகங்களை உள்ளடக்கிய இந்தப் பொறுப்பில், அவர் மூலோபாய திசைகாட்டி மற்றும் தலைமை கண்காணிப்பு வழங்குவார். இந்த நியமனம் நிறுவனத்தின் 'இந்தியா முதல்' வளர்ச்சி உத்தியுடன் ஒத்துப்போகிறது. இதுகுறித்து நிப்பான் பெயிண்ட் (இந்தியா) குழும நிர்வாக இயக்குநர் ஷரத் மல்ஹோத்ரா கூறுகையில், இந்தியப் பயணத்தின் முக்கிய கட்டத்தில் ஜெனெண்டரின் நியமனம் நமது தலைமை வலிமையை அதிகரிக்கிறது. ஆட்டோமோட்டிவ் துறையில் அவரது விரிவான அனுபவம், இந்தியா, நேபாளம் மற்றும் இண்டோ கோட் வணிகங்களை ஒருங்கிணைந்த முறையில் வளர்க்க உதவும் என்றார். மேலும் ஜெனெண்டர் ஆனந்த் கூறுகையில், ஓஇஎம் ஒத்துழைப்பு மற்றும் சந்தை விரிவாக்கத்தில் எனது அனுபவத்தை பயன்படுத்தி, செயல்திறன் மேம்பாடு மற்றும் நிலையான வருவாய் வளர்ச்சியை முன்னெடுக்க ஆவலாக உள்ளேன் என்று கூறினார்.



திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை ஊராட்சி ஒன்றியம் வேலாயுதம்பாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.



முதுகுளத்தூர் தபால் அலுவலகம் முன்பு பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பேரூராட்சி சேர்மன் ஷாஜகான், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தராஜன், பூபதிமணி, ஹரி முத்துராமலிங்கம், த.மு.மு.க. மாவட்ட தலைவர் வாவாராவுத்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் சி.ஐ.டி.யூ தொழிற்சங்கத்தினர் சாலை மறியல் போராட்டம் -84 பேர் கைது



**நத்தம், பிப். 13-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பஸ் நிலையம் அருகில் சி.ஐ.டி.யு தொழிற்சங்கங்கள் சார்பில் சாலை மறியல் போராட்டம் நடந்தது. இதற்கு சி.ஐ.டி.யு ஒன்றிய பொறுப்பாளர் ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில குழு உறுப்பினர் ராணி, ஒன்றிய செயலாளர் குழந்தைவேல், மாவட்ட குழு உறுப்பினர் சின்னக்கருப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் விவசாயிகள், தொழிலாளர் விரோத சட்டங்களை வாபஸ் பெற வலியுறுத்துவது உள்ளிட்ட 4 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி மத்திய அரசை வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம் நடந்தது. இதனால் நத்தம்- திண்டுக்கல் சாலையில் அரைமணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தொடர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 39 பெண்கள் உள்பட 84 பேரை நத்தம் போலீசார் கைது செய்தனர்.

# புதிய நீதிமன்ற கட்டிடம் கட்டக்கோரி மேலூரில் வழக்கறிஞர்கள் சாலை மறியல்



**மேலூர், பிப். 13-**

மேலூர் தாலுகா அலுவலகத்தில் இயங்கி வரும் நீதிமன்ற கட்டிடங்கள் 120 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் ஆகும்.

நீதிமன்றம் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கட்டிட மேற்கூரைகள் இடிந்து விழுகிறது என்று பலமுறை மேலூர் வழக்கறிஞர் சங்கத்தினர் அரசுக்கு கோரிக்கை மனு கொடுத்துள்ளனர்.

தொடர்ந்து நேற்று வழக்கறிஞர்கள் பொதுமக்கள் கோர்ட்டில் இருந்துபோது கட்டிட மேற்கூரை இடிந்து விழுந்ததால் வழக்கறிஞர்கள் கோர்ட் புறக்கணிப்பு செய்து கோர்ட்டில் இருந்து மேலூர் பஸ் நிலையம் வரை ஊர்வலமாக சென்று பஸ் மறியல் செய்தனர்.

புதிய கட்டிடம் கட்டுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் இன்று தாலுகா அலுவலகம் முற்றுகை அதனைத் தொடர்ந்து உண்ணாவிரத போராட்டம் நடத்தவோம் என்று வழக்கறிஞர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

# வட பாலையில் கல்குவாரி அமைக்க எதிர்ப்பு: திருச்சுழி தாலுகா அலுவலகத்தை முற்றுகையிட்ட விவசாயிகள்



**திருச்சுழி, பிப். 13-**

திருச்சுழி வட்டம் வடபாலைக் கிராமத்தில் கல்குவாரி மற்றும் கிரஷர் அமைக்கும் முயற்சியை கைவிட்டு இதன் ஆரம்ப அனுமதியை ரத்து செய்யக்கோரி வட பாலை மற்றும் அதைச் சுற்றியுள்ள 15க்கும் மேற்பட்ட கிராமங்களின் நிலம் நீர் நிலத்தடி நீர் காற்று சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டு விவசாயம் வாழ்வாதாரம் அழியும் பேராபத்து, கல்குவாரி கிரஷர் அமைக்கும் அனுமதியை ரத்து செய்ய வலியுறுத்தி தென் மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் 200க்கும் மேற்பட்டோர் தென் மாவட்ட விவசாய சங்க விருதுநகர் மாவட்டத் தலைவர் ராம்பாண்டியன், செயலாளர் ஆ.கோபாலகிருஷ்ணன் பண்ணை மூன்றடைப்பு அர்ச்சுனன் தலைமையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கோரிக்கைகளை ஆதரித்து பாரதிய ஜனதா கட்சி சார்பில் கஞ்சநாயக்கன்பட்டி அழகர்சாமி, கமுதி பாண்டியன், நாம் தமிழர் கட்சி சார்பாக நாகேந்திரன் கார்த்திகை பாண்டியன் தமிழக வெற்றி கழகம் சார்பில் கணேசமூர்த்தி தமிழர் தேசம் கட்சியின் சார்பில் ராஜேந்திரன் வடபாலை லட்சுமண பெருமாள் தென் மாவட்ட விவசாய சங்க ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் மலைச்சாமி தென் மாவட்ட மாநில பொதுச் செயலாளர் அர்ஜுனன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினார். இக்கூட்டத்தில் தோப்பூர் தங்கம் கலுவனச்சேரி சேகர் பச்சரி சேவுக மூர்த்தி இலங்கிபட்டி விக்னேஷ் வடபாலை முருகன் முத்துக்கிருஷ்ணன் ஏரம்பட்டி வேல்முருகன் ஆகியோர் பங்கேற்றனர் பின் திருச்சுழி தாசில்தார் கருப்பசாமி அவர்களிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இப் போராட்டத்திற்கு திருச்சுழி காவல்துறை துணை கண்காணிப்பாளர் ரெட்டியாபட்டி இன்ஸ்பெக்டர் திருச்சுழி சப்-இன்ஸ்பெக்டர் வீரணன் உள்பட ஏராளமான காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

